**R5678** Did Jesus Revile His Enemies?

# இயேசு அவரது சத்துருக்களை வைதாரா?

"அவர் வையப்படும்போது பதில் வையவில்லை." I பேதுரு 2:23

இயற்கையாகவே இந்த கேள்வி எழுகிறது. நமது கர்த்தர், பரிசேயர், வேதபாரகர் மற்றும் நியாய சாஸ்திரிகளை நோக்கி, மாயக்காரர், விரியன் பாம்புக் குட்டிகள் முதலான வார்த்தைகளை கூறி பகிரங்கமாக குற்றஞ்சாட்டின இந்த உண்மையை பரிசுத்த பேதுருவின் கூற்றோடு எப்படி இசைவுபடுத்துவது?

சுவிசேஷங்களில் கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களை நாம் நினைவுக்கு கொண்டு வருவோம். பரிசுத்த பேதுரு பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இருந்தார். ஆகையால் அவர் நமது கர்த்தருடன் அவரது பூமிக்குரிய ஊழியத்தில் தொடர்ந்து இருந்தார். ஆகையால் ஆண்டவர் வையப்படும் போது திருப்பி வையவில்லை என்கிற உண்மைக்கு அவர் ஒரு நல்ல சாட்சியாக இருந்தார். அப்போஸ்தலருடைய வசனத்தின் கருத்து இயேசு பதிலுக்கு பதில் செய்யவில்லை என்பது. தீய காரியங்கள் அவரைப்பற்றி சொல்லப்பட்ட பொழுது, அவருக்கு தீங்கு செய்தவர்களிடம் தீயவைகளை அவர் பேசவில்லை. அவர் அவர்கள்மேல் வசைமொழியை கூறவில்லை, ஆனால் தம்மை தெய்வீக நீதியின் கைகளிலும் தேவனிடமும் ஒப்புக்கொடுத்தார்.

வேத ஊழியர்கள் நமது கர்த்தருக்கு விரோதமாக சில வசைகளை பதிவு செய்கிறார்கள். "இவன் பிசாசு பிடித்தவன், பைத்தியக்காரன்'' என்று அவரது எதிரிகள் ஒரு தடவை அவரைப்பற்றி சொன்னார்கள். மேலும் இயேசு, தாம் "பெயல்செபூல்"-பிசாசுகளின் தலைவன் என்று அழைக்கப்பட்டதாக கூறினார். வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவரது கிரியைகளை ஒத்துக் கொண்டார்கள், ஆனால் அவரது நல்ல கிரியைகள் சாத்தானுக்கு என்று குற்றஞ்சாட்டினார்கள். அவரது பிறப்பு முறைதவறானது என்று கூறினார்கள். இந்த ஆலயத்தை இடித்துப்போட்டால் நான் மூன்று நாளைக்குள் எழுப்புவேன் என்று அவர் கூறியதை வேத தூஷணம் என்று நிரூபிக்க முயற்சித்தார்கள். அவரது போதனையின் ஆவியை புரிந்துகொள்ளவில்லை. அவரது கூற்றுக்களில் குற்றம் கண்டுபிடிக்கவே முயற்சித்தார்கள். அவரது வார்த்தைகளில் அவரை சிக்க வைக்க முயற்சித்தார்கள். அவர் உண்மையிலேயே ஒரு பெரிய மனிதனாக இருந்தால், அவர் பாவிகளுடனும் ஆயக்காரருடனும் ஐக்கியம் கொள்ளாமல் தங்களுடன் ஐக்கியம் வைத்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். கடைசியாக அவரை இரு கள்ளர்களுக்கிடையே சிலுவையில் அறையும் அளவுக்கு அவரை தூஷித்தார்கள்.

அந்த காலத்தில் இயேசு எப்படி வேதபாரகர், பரிசேயர்கள் மற்றும் பிரதான ஆசாரியர்களிடம் மிகவும் கடுமையான காரியங்களை கூறினார்? உதாரணமாக, அவர் அவர்களை "விரியன் பாம்புகுட்டிகளே," "வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களே," "மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தங்களினாலும்'' நிறைந்திருக்கும் கல்லறைகளே" என்று அழைத்தார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில், "மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?'' என்று கூறினார். மறுபடியும் அவர், "சர்ப்பங்களே, விரியன்பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" என்று கூறினார். "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவின் இச்சையின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்'' என்று அறிக்கையிட்டார்." இன்னொரு சமயத்தில் அவர் "மதிகேடரே, குருடரே!" என்றும், "குருடரான வழிகாட்டிகளே!" என்றும் "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, அதில் பிரவேசிக்கப்போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை... மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்... மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் ஜீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்.இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே. குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள், மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்கள், உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே! போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு," இவைகளெல்லாம் நிந்தனைகளா? நாம் கவனித்துக்கொண்டிருக்கிற வசனத்தை பரிசுத்த பேதுரு, எழுதும்போது தவறு பண்ணவில்லையா? மாறுபாடு எங்கே வருகிறது?

### இயேசு திருப்பி அடிக்கவில்லை

நாங்கள் பதிலளிக்கிறோம். நமது கர்த்தர் அவர்களை திருப்பி அடிக்கவில்லை, அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அவர் முன்னமேயே செய்துவிட்டார்; ஆகையால் அவருக்கு எதிராக அவர்கள் பேசியவைகளுக்கு அவர் பதில் பேசவில்லை. பிசாசை அவர்கள் பெற்றிருப்பதாக அவர்களில் யாரிடமும் அவர் சொல்லவில்லை. பொதுவாக அவர்கள் வைத்திருந்த முறைமைகள் கேடு உண்டாக்கும்

முறைமைகள் என்று பேசினார். இஸ்ரயேலின் ஆட்சியாளர்கள் மாயக்காரர்கள் என்று கர்த்தர் அறிவிக்கவில்லை என்றால், அவர்கள் வெளிப்பார்வைக்கு பிரமாணத்தை கடைப்பிடிப்பவர்களாக காணப்பட்டபோது, அவர்கள் மாயக்காரர் என்பதை நாம் அறிந்திருக்க முடியுமா? ஜனங்கள் கூறியவைகள்; “இந்த பரிசுத்த மனிதர்கள் எப்படி சுற்றித்திரிந்து தெருமுனைகளில் ஜெபம் பண்ணுகிறார்கள் பாருங்கள்! அவர்களது பெரிதான வஸ்திரங்களின் தொங்கல்களைப் பாருங்கள்! அவர்கள் ஜெபம் பண்ணுகிற நேரத்தில் பாதி அளவு இயேசு ஜெபம் பண்ணுவதை நாங்கள் பார்க்கவில்லை. பிரமாணத்தை கைக்கொள்ள எப்பொழுதும் கவனமாக இருக்கிறார்கள்.” ஆகையால் அவர்கள் கவனம் செலுத்துவது, தசமபாகம் செலுத்துவது, நீண்ட ஜெபம் செய்வது எல்லாம் மாய்மாலமானது என்று நமது கர்த்தர் குறிப்பிட்டு சொன்னது மிகவும் சரியானதே. அவர்கள் ஒற்தலாமிலும் ஜீரகத்திலும் தசமபாகம் கொடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள், ஆனால் விதவைகளின் வீடுகளை பட்சித்துப்போடுவதில் தயங்குவதில்லை. விதவைகளின் சொத்துக்களை தக்கவைத்துக்கொள்ள உதவி செய்து, பிறகு அவர்கள் இதை எடுத்துக்கொள்வார்கள்.

வெளிப்படையான இந்த பரிசுத்த மனிதர்களை உண்மையிலேயே வெளியரங்கமாக எப்பொழுதும் வெண்மையாகவும், சுத்தமாகவும் அழகாகவும் இருந்தார்கள். ஆனால் உள்ளேயோ அருவருப்பும் அசுத்தமும் நிறைந்திருக்கும். அவர்கள் அவர்களது பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், அவனது ஆவியை அவர்கள் உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் சுத்தமான இருதயத்தோடு நன்மைகளையோ தேவனுக்கு ஊழியத்தையோ செய்யவில்லை. அவர்களது ஊழியமெல்லாம் வெளியரங்கமானது மட்டுமே. அவர்களது முறைமைகள் எல்லாம் மாயையுடனான தேனடையாக இருந்தது. இந்த கால மொழியில் சொல்வோமேயானால் அது “அழுகிப்போனதாக”இருந்தது. அவர்களது மாய்மாலத்தை வெளிப்படுத்தவேண்டியதும் சுத்தமான இருதயமுடையவர்களை அவர்களது கேடுகளிலிருந்து காக்கப்படவேண்டியதும் அவசியமாயிருந்தது. இயேசு தனிப்பட்ட யாரையும் பேர் சொல்லி அழைத்து கண்டிக்காமல் ஒரு வகுப்பாராக அவர்களை கண்டித்தார். அவர் அவர்களுக்கு தீங்கு செய்ய நாடாமல், நன்மை செய்யவே, முடிந்தால் அவர்களையும் அவர்களது தீமையான செய்கைகளையும் எச்சரிக்கவே விரும்பினார். நமது கர்த்தர் ஜனங்களை இரட்சிக்க விரும்பினார்; ஆகையால் இவைகளை ஒரு வகுப்பாருக்கான காரியங்களாக பேசினார். அந்த வகுப்பாரைக் குறித்து சில தீமையான காரியங்களையும் சொன்னார். அந்த வகுப்பாரில் ஒவ்வொருவரும் தனது வஸ்திர தொங்கலை சரிபடுத்தவும், இரண்டுவிதமான வாழ்க்கையை வாழவில்லை என்று காண்பிக்கவும் வேண்டியதாயிருந்தது, ஆகையால் நமது கர்த்தரின் வார்த்தைகள் தீமைகளை பேசுதலின் கீழ் வராது. அவர் ஓர் ஒழுங்கைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார். அவர் ஜான் ஸ்மித் என்பவரைப்பற்றிய இரகசியத்தையோ அல்லது திருமதி பிரஷன் இப்படிப்பட்டவர், இதைச் செய்தார், அதைச் செய்தார் என்று தனிப்பட்ட வாழ்க்கை முதலானவைகளைப் பற்றியோ பேசவில்லை.

ஆகையால் தற்கால தெளிவான பிழைகளை கவனத்திற்கு கொண்டு வருகிற ஒரு பூரணமான உரிமையை நாம் பெற்றிருக்கிறோம் என்று நம்புகிறோம், நமது கர்த்தர் செய்ததுபோல் நாம் கண்டிப்பது சரியாக இருக்காது. நமது கர்த்தரின் காலத்தில் இருந்த யூதர்களை காட்டிலும் தற்காலத்தில் ஜனங்கள் மிகவும் அதிகமாக கோபம் கொள்வார்கள். அவர்களது தலைவர்கள் செய்த இந்த காரியங்களில் சிலவற்றை நமது கர்த்தர் கண்டித்திருக்கவில்லையென்றால் பரிசேயர்கள் கர்த்தரின் ஆதரவை பெற்றிருந்திருப்பார்கள். அங்கே அவர்கள் பக்திமானைப்போல நடிக்கிற முகத்தை வைத்துக் கொண்டு அநேக ஜெபங்கள் முதலானவைகளை கூறி வந்தார்கள். உண்மையிலேயே அவர்கள் பரிசுத்தமான ஜனங்களா? இயேசு அங்கே தேவனுடைய பிரதிநிதியாக இருந்து கொண்டு, தமது கருத்துக்களை கூறிவந்தார். ஆகையால் இந்த பரிசேயர்கள் தேவனை சந்தோஷப்படுத்தும் காரியங்களை செய்யவில்லை என்பதை இயேசு ஜனங்கள் அறியும்படி செய்தார். அவர் அவரது கடமையை மட்டுமே செய்தார்.